முருகப்பெருமான் துணை

**மகான் திருநாவுக்கரசர் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.03.2023**, வியாழக்கிழமை

1. ஞானச்சுடரேற்றி அருளுகின்ற
ஞான வள்ளலே அரங்கா
ஞானவான்களை படைத்தருள
ஞானியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சால்திங்கள்
வரங்களென இருபானைதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 25 ம் நாள், 09.03.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை திருநாவுக்கரசர் யானும்
அருளுவேன் உலகநலம் காண
ஆசிதந்து மக்களை மீட்கும்
அரங்கன் காட்டும் வழிமுறை
4. வழிமுறைகள் எளிமையாகவும்
வல்லமை தரும் வண்ணமுமாகவும்
அழியாமையின் சக்தியாகவும் இருக்க
அன்பர்கள் அனுகி வந்து
5. வந்துமே சரணாகதி கொண்டு
வணங்கித் தொடர்ந்து வர
சிந்தை வைத்து உலகமக்கள்
சித்தி தரும் சடாட்சர தீட்சை
6. தீட்சைதனை அரங்கன் மூலம்
தரணியோர் ஏற்று செய்துவர
தீட்டெனும் அனைத்து வினைகளும்
தெரிவிக்க அகன்று மேவியே
7. மேவியே மக்களிடை தெளிவு
மேலான ஆற்றல்கள் பெருகி
அவனியில் ஞானவான்களாகவே
அவரவரும் தேற்றம் கண்டு சிறப்பர்
8. சிறப்பான வழிகாட்டலாகவே
செகமெல்லாம் மாற்றம் காண
மறுப்பின்றி ஞான ஆட்சி
மகான்கள் ஆசிபட உலகம் காண்கும்
9. காண்கவே தமிழகம் துவங்கி
கட்டாய மாற்றமாக உலகெலாம்
நன்மைதரும் ஞான ஆட்சிமலரும்
ஞானிகள் பலம் கூடி இனிதே

10. இனிதே எங்கும் எதிலும்
இணையில்லா பரோபகாரமாக
கனிவேலன் அனுகூலம் கூடி
காக்கும் வண்ணம் சக்தி பெருக்கி

11. பெருக்கியே உலக மக்கள்
பெரும் பேறு எனும் ஞானவீட்டை
கருத்தாக அடைந்து உயர்வர்
கண்டுரைத்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—